# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

## S.C.No.165/2023

## PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | பாண்டிமீனா | Caste: | |
| Husband name | செல்வராசு | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of February 2025.

1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் காளையார்கோவில் குமரன் தெருவில் வசித்து வருகிறேன். சித்தாள் வேலை செய்துவருகிறேன். எனது கணவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். எனக்கு 2 மகன்களும் ஒரு மகளும் உண்டு. என் மகளை ஏற்கனவே திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். எனது இரண்டாவது மகன் விஸ்வபாரத் என்பவர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். இந்த வழக்கில் இறந்துபோன மகி (எ) மகேஸ்வரன் எனது முதல் மகன் ஆவார். அவர் திருப்பூரில் மதுபாரில் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் என் மகனுடன் நண்பர்களாக பழகி வந்தவர்கள்தான். என் மகன் மீது பல திருட்டு வழக்குகள் காளையார் கோவில் காவல்நிலையத்தில் பல வழக்குகள் இருந்தன. எதிரிகள் மணிகண்டன் என்பவரும், மனோஜ்குமார் என்பவரும் என் மகனை மது அருந்துவதற்காக மாலை நேரத்தில் கூட்டிச்செல்ல வருவார்கள். நான் அவர்களுடன் சேரக்கூடாது என என் மகனை கண்டித்தேன். இந்த வழக்கு சம்பவம் நிகழ்வதற்கு 10 நாட்களுக்கு முன்னால் எதிரி மணிகண்டன் என்பவர் என் வீட்டு ஓடுகளை உடைத்துவிட்டு, வீட்டில் அடைக்கப்பட்ட கோழியின் கழுத்தை அறுத்துபோட்டு என் மகனையும் இதேபோல்செய்வேன் என்று சொன்னார். இந்நிலையில் கடந்த 25.12.2022ம் தேதி காலை 10.00 மணிக்கு வீட்டை விட்டு சென்றவனை நான் பல இடங்களில் தேடினேன். என் மகனை காணாத காரணத்தால் ஆஜர் எதிரிகளான மணிகண்டன், மனோஜ்குமார் இருவரும் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த என் மகனை கூட்டிக்கொண்டு போனதாகவும் இது வரை அவனை காணவில்லை என காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்நிலையில் 27.12.2022ம் தேதி காலையில் என் மகன் வலையம்பட்டி சமுதாயக்கேணிக்குள் இறந்துகிடப்பதாக தகவல்சொல்லி நான்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:29 +0530

அங்கு சென்றபின் தீயணைப்பு துறையினரை வரச்செய்து நான், என் தங்கை மாலதி, அப்பா மாரி, தம்பி காளிதாஸ் ஆகியோர்கள் அங்கு நின்ற நிலையில் என் மகனை வெளியே தூக்கி போட்டார்கள். என் மகனுக்கு கழுத்து அறுத்தபடியும், முகத்தில் கொத்துக்காயமும், கையில் வெட்டுக்காயமும் இருந்தது. மேற்குறிப்பிட்ட எதிரிகள் தான் என் மகனை வெட்டிக்கொன்றுவிட்டார்கள் என்று நான் தெரிந்துகொண்டேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தபோது இந்த விவரத்தை தான் நான் என் மகனின் உடலை அடையாளம் காட்டி சொன்னேன். இங்கு காட்டப்படும் ஆவணம் என் மகனை காணவில்லை என்று நான் கொடுத்த புகார்தான். அந்த புகார்மனு **அ.சா.ஆ.1** . ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் இப்போது சொன்ன விவரங்களை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

**<u>1-வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சாட்சி காளிதாஸ் என்பவர் என் தம்பி என்றால் சரிதான். மாலதி என் தங்கை ஆவார். சாட்சி மாரி என் அப்பா, 7வது சாட்சி முருகன் எனது தங்கை பாண்டிச்செல்வியின் கணவர் ஆவார். 25ம் தேதி எத்தனை மணிக்கு நான் புகார்கொடுத்தேன் என்றால் காலை 10.00 மணிக்கு புகார் கொடுத்தேன். 1, 2 எதிரிகள் தான் என் மகனை அழைத்துச்சென்றதாக கூறிதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். 1, 2 எதிரிகள் என் மகனை கூப்பிட்டுக்கொண்டு போகும்போதே என் மகனை போகக்கூடாது என்று தடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய புகாரிலும் போலீசார் விசாரணையிலும் மேற்படி விவரங்களை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நிகழ்வதற்கு 10 நாட்களுக்கு முன்னால் எதிரிகள் மணிகண்டன் என்பவர் என் வீட்டு ஓடுகளை உடைத்துவிட்டு, வீட்டில் அடைக்கப்பட்ட கோழியின் கழுத்தை அறுத்துபோட்டு என் மகனையும் இதேபோல்செய்வேன் என்று சொன்னார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். எதிரிகள் என்னை அடித்ததையும் சொன்னேன். என் மகன் சிவகங்கை வழக்கறிஞர் பில்லப்பன் என்பவரை கொலை செய்ததாக என் மகன் மீது ஒரு வழக்கு உள்ளது என்றும் அதில் என் மகனை நான் ஜாமீனில் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் மதுரை ஜெயிலில் பிரச்சனை ஏற்பட்டதாக கரிமேடு காவல்நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகன் ஜெயிலுக்கு அழைத்துச்செல்லும்போதே தப்பித்து வந்துவிட்டான். அதில் ஜெயிலர் தான் புகார்கொடுத்தார் என்றால் சரிதான். நானே என் மகனை ஒப்படைத்துவிட்டேன். அது

போக என் மகன் மீது 30, 40 வழக்குகள் காளையார்கோவில் மற்றும் பல காவல்நிலையங்களில் உள்ளது என்றால் சரிதான்.என் மகன் கேணியில் இறந்துகிடப்பதாக போலீசார் தகவல்சொல்லிதான் நான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். 26.12.2022ம் தேதி இரவு போலீசார் தகவல் சொன்னார்கள் என்றால் சரிதான். அப்போது என் னநேரம் இருக்கும் என்றால் இரவு 11.00, 12.00 மணியிருக்கும். ஊர் ஆட்கள் அனைவரும் சேர்ந்து சென்று கேணியிலிருந்து என் மகனின் சடலத்தை தூக்கினார்கள் என்றால் சரிதான். அப்போது விடியற்காலை 5.00 மணியிருக்கும் என்றால் சரிதான். 25.12.2022-ம் தேதி காலை எதிரிகள் என் மகனை அழைத்துச்செல்லும்போது எனது அப்பா மாரி வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். எதேச்சியாக என் அப்பா வீட்டிற்கு வந்திருந்தார். அப்போதிலிருந்தே என் மகனை தேடிப்பார்க்கும் போதும், புகார் கொடுக்கும்போதும் என் அப்பா என் உடன் தான் இருந்தார்என்றால் சரிதான். நானும் என் அப்பாவும் மட்டும்தான் புகார்கொடுக்க காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் காவல்நிலையத்தில் இருக்கும்போதே என் தங்கை மாலதியை வரச்சொல்லி அவரிடம் சொல்லி புகார் எழுதினேன். நான் காவல்நிலையத்திற்கு சென்று என் தங்கையை வரச்சொன்னேனா என்றால் போலீசார் புகார் எழுதிதரச்சொன்னதன்பேரில் என் தங்கையை வரச்சொன்னேன். இங்கு காட்டப்படும் எதிரிக்கு சார்புசெய்யப்பட்ட முதல்தகவல் அறிக்கை நகலின் கீழே பெற்றுக்கொண்டேன் என்று கீழே உள்ள கையொப்பம் என்னுடையது தான். சார்புசெய்யப்பட்ட முதல்தகவல்அறிக்கை நகல் **எ.த.சா.ஆ.1** . ஆக குறியீடு செய்யப்படுகிறது. 27.12.2022 அன்று காலை 5.00 மணிக்கு என் மகன் சடலத்தை எடுத்து போலீசார் என்னை விசாரித்தபின்பு வேறு எப்போதும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அதன்பின்பும் விசாரித்தார்கள். என் மகனின் சடலத்தை வாங்க மாட்டோம் என்று போராட்டம் செய்தோம், போலீசார் 1, 2 எதிரிகளை கைது செய்துவிட்டதாகவும் அதனால் சடலத்தை பெற்றுக்கொள்ளுமாறு சொன்னதால்தான் சடலத்தை பெற்றுக்கொண்டோம். என் மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் உண்டு. வலயம்பட்டி - கீழவலயம்பட்டி ரோடு என்பது ஆள்நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். காளையார்கோவிலில் உள்ள ஒயின்ஷாப் இருக்கும் பகுதி காட்டுப்பகுதி என்றால் சரிதான். ஒயின்ஷாப்பிலிருந்து காளையார்கோவிலுக்கு செல்லவேண்டும் என்றால் காட்டுப்பகுதிவழியாக வலையம்பட்டி சென்றுதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என் மகனுக்கு பல எதிரிகள் இருக்கிறார்கள் என்றும் அதில் யாரோ ஒருவர் கொலை செய்துவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் மகனை 1, 2 எதிரிகள் தான் அழைத்துச்சென்று கொன்றுவிட்டார்கள் வேறு எதிரிகள் என்

மகனுக்கு இல்லை. என் மகன் மீது நிறைய வழக்குகள் உள்ளது என்றும், அவ்வாறு நிறைய எதிரிகள் உள்ளார்கள் என்றும், என் மகனை யார் உண்மையாக கொன்றார்கள் என்று போலீசாரை கண்டுபிடிக்க விடாமல் நாங்கள் போராட்டம் செய்ததால் 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் என்று முடிவு செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதே போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு சென்று என் மகன் பிரேதத்தை பார்த்து அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல. போலீசார் இந்த வழக்கை ஜோடனை செய்துள்ளார்கள் என்றும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியளம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால்சரியல்ல.

**<u>2-ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:38 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.165/2023

PROSECUTION WITNESS No - PW- 2

| | | | |
|---|---|---|---|
| Name : | மாலதி | Caste: | |
| Father Name/Husband name | கணேசன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of February 2025.

1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கவ்வூர் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்களுக்கு விவசாயம் தொழில் ஆகும். இவ்வழக்கில் இறந்துபோன மகி (எ) மகேஸ்வரன் எனது உடன் பிறந்த அக்காவின் மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் பார்த்ததில்லை. என் அக்கா மகனை காணவில்லை என்றும், அவனை காணாமல்போனதாக காளையார்கோவில் சந்தையில் பேசிக்கொண்டார்கள். நான் என் அக்காவிடம் இது குறித்து விசாரித்தேன். என் அக்கா கடந்த 2 நாட்களாக மகி என்பவரை காணவில்லை என்று சொன்னதன் பேரில் நானும் என் அக்காவும் காளையார்கோவில் கா வல்நிலையம் சென்று என் அக்கா சொன்ன விவரத்தை நான் புகாராக எழுதி சாட்சி கையொப்பம் இட்டு என் அக்கா கையெழுத்திட காவல்நிலையத்தில் கொடுத்தோம். இங்கு காட்டப்படும் ஆவணம் நான் எழுதி கொடுத்த புகார்மனுதான். அதில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனு **அ.சா.ஆ.2** . குறியீடு செய்யப்படுகிறது. அதில் என் அக்கா மகன் காணவில்லை என்று தான் புகார்கொடுத்தோம். நான் அரைப்பரிட்சை விடுமுறைக்கு காளையார்கோவில் சென்றிருந்த நிலையில் என் அக்காவிற்கு போலீசார் விவரம் சொல்லி நானும் என் அக்காவுடன் சேர்ந்து காவல்துறையினர் அழைத்த இடத்திற்கு சென்றபோது கேணியிலிருந்து என் அக்கா மகன் பிரேதத்தை எடுத்து போட்டதை பார்த்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்த போது என் அக்கா பிரேதத்தை அடையாளம் காட்டினார். அப்போது நானும் உடன் இருந்தேன். மேற்படி விவரத்தை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:44 +0530

**<u>1-வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை முதல்முதலில் எப்போது விசாரித்தார் என்றால் தேதி ஞாபகமில்லை, ஆனால் அரையாண்டு தேர்வு விடுமுறைக்கு என் அப்பா வீட்டிற்கு சென்றபோது தொலைபேசி அழைப்பின்பேரில் நான் காவல்நிலையம் சென்று புகார் எழுதிகொடுக்க சென்றபோது விசாரித்தார்கள். அதன் பின்பு நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அதன் பின்னர் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் அரையாண்டு விடுமுறைக்கு வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. சம்பவ சமயத்தில் எனக்கு காளையார்கோவில் வாரச்சந்தையில் சுமார் எத்தனை மணிக்கு போன் வந்தது என்றால் மதியம் சுமார் 2.00 மணிக்கு போன் வந்தது. என் அக்கா மகனை வெட்டிக்கொன்றுவிட்டதாக எனக்கு தகவல் வந்ததா என்றால் வெட்டிவிட்டதாக பலபேர் பேசிக்கொண்டதாக சொன்னார்கள். ஒவ்வொருவாரமும் திங்கட்கிழமை அன்று காளையர்கோவிலில் சந்தை நடக்கும் என்றால் சரிதான். நான் வாரச்சந்தையில் இருக்கும்போது யார் தகவல்சொன்னார்கள் என்றால் எங்களுக்கு தெரிந்த கலையரசி என்பவர் போன் மூலம் தகவல்சொன்னார். என் அக்கா மகனை வெட்டிக்கொன்றுவிட்டதாக சொன்ன விவரத்தை நான் என் அக்காவிடமும் சொன்னேன் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போதும்மேற்படி விவரத்தை சொன்னேன் என்றால் சரிதான். புகாருக்கான தகவலை போலீசார் தான் சொன்னாரா என்றால் இல்லை. என் அக்கா மகன் இறந்தபிறகு என் அக்காவும் நானும் சென்று காவல்நிலையம் சென்றோம். என் அப்பாவும், அக்கா பாண்டிச்செல்வியின் கணவர் முருகனும் காடனேரியில் வசித்து வருகின்றனர் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் போலீசார் தகவல் சொன்ன பிறகு தான் என் அக்கா மகன் பிரேதம் உள்ள கேணிக்கு காடனேரியிலிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். காடனேரியிலிருந்து காளையார்கோவிலுக்கு வர 40கிமீ தூரம் என்றால் சுமார் அரை மணிநேரத்தில் இருசக்கர வாகனத்தில் வந்துவிடலாம் என்றால் கிமீ எனக்கு தெரியவில்லை. பைக்கில் அரைமணிநேரத்தில் வந்துவிடலாம். போலீசார் இந்த வழக்கை ஜோடனை செய்துள்ளார்கள் என்றும் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியளம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால்சரியல்ல.

**<u>2-ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:</u>**

1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:51 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.165/2023

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | மாரி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | காடனேரி | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of February 2025.

1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்.

**முதல் விசாரணை :**

எனது சொந்த ஊர் காடனேரி கிராமம் ஆகும். நான்விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 பாண்டிமீனா எனது மூத்த மகள் ஆவார். அ.சா.2 மாலதி எனது 2வது மகள் ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன மகி(எ)மகேஸ்வரன் எனது மூத்த மகள் வழி பேரன் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் எதிரிகள் என் பேரனை அழைத்துச்சென்றதாக என் மகள் சொல்லி தெரியும். இன்று தான் எதிரிகளை முதல் முதலாக பார்க்கிறேன். மீண்டும் சாட்சி எதிரிகள் அவர் பேரனை அழைத்துச்சென்றார்கள் என்று கூறுகிறார். கடந்த டிசம்பர் மாதம் 2022ல் காலை 9.00 மணிக்கு நான் என் மகள் பாண்டிமீனா வீட்டிற்கு சென்றிருந்தேன். சுமார் 10.00, 10.30 மணியைபோல 2பேர் வந்து என் பேரனை அழைத்துச்சென்றார்கள். அவர்கள் யார் என்று என் மகளிடம் கேட்டதற்கு கீழவலையம்பட்டியை சேர்ந்த மணிகண்டன், மனோஜ் என்று சொன்னார்கள். நான் சத்தம்போட்டேன். நான் வந்தவிடுகிறேன் தாத்தா, வீட்டில் இருங்கள் என்று சொல்லிவிட்டு என் பேரன் சென்றுவிட்டான். மறுநாள் என் பேரனைக்காணவில்லை. தேடிப்பார்த்ததற்கு பின் என் மகள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாள். போலீசாரும் நாங்களும் என் பேரனை தேடினோம். அதற்கு மறுநாள் வலையம்பட்டி சமுதாயக்கேணியில் ஒரு பிணம் கிடப்பதாக போலீசார் என் மகளுக்கு தகவல்சொல்லி என் மகள் சென்றார், நான் செல்லவில்லை, என் மகள் பிணத்தை அடையாளம் காட்டியதாக கேள்விபட்டேன். இது சம்மந்தமாக நான் தற்போது சொல்லும் விவரத்தை தான் போலீசாரிடமும் சொன்னேன்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:52:57 +0530

**1-வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

போலீசார் சம்பவம் குறித்து என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெற்றார்களா என்றால் அவ்வாறு எதுவும் விசாரிக்கவில்லை. நான் புகார் கொடுக்க காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனது 2வது மகள் மாலதி என் பேரன் இறந்துவிட்டதாக சொன்ன பிறகு தான் புகார்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நானும் என் மருமகனும் காடனேரியிலிருந்து என் பேரனை பிரேதபரிசோதனை செய்யும்போது மருத்துவமனைக்கு சென்றுதான் பார்த்தோம் என்றால் சரிதான். என் பேரன் என்னிடம் நீங்கள் வீட்டில் இருங்கள் நான் வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு சென்ற விவரத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கேள்விபட்டதுபோல் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், இறந்தது என் பேரன் என்பதாலும், புகார் தாரர் என் மகள் என்பதாலும் அவர்களுக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2-ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

**மறு விசாரணை. இல்லை**

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.02.04 14:53:04 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை